# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 09 வெள்ளிக்கிழமை 25.07.2025 கதிர் 265









## நல்லூர் கந்தனுக்குச் செவ்வாய் கொடியேற்றம்!

### ஏற்பாடுகள் மும்முரம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனை முன்னிட்டு ஆலய வெளிவீதியைச் சுற்றி சிவப்பு வெள்ளைத் துணிகள் கட்டப்பட்டு, திருவிழாவுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் மகோற்சவ திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

மகோற்சவ திருவிழாக்களின் 10ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா எதிர்வரும் 7ஆம் திகதியும், 22ஆம் திருவிழாவான மாம்பழத் திருவிழா

7

# தேசபந்து பதவி நீக்கம்: ஓகஸ்ட் 5 வாக்கெடுப்பு!

## நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானம்



**கொழும்பு, ஜூலை 25**

**பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை அந்தப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பான விவாதம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.**

**சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.**

**இதற்கமைய ஓகஸ்ட் 5ஆம் திகதி முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை மேற்படி தீர்மானம் தொடர்பில் விவாதம் நடத்தப்படும். அதன்பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படும்.**

## சர்வதேச நீதி கோரி தமிழர் தாயகத்தில் நாளை போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 25

தமிழின அழிப்புக்குச் சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாளை மாபெரும் போராட்டங்கள் நடைபெறவுள்ளன.

7

## தமிழ்த் தேசிய வீரர்கள் தின நினைவேந்தலுக்கு அழைப்பு




யாழ்ப்பாணம், ஜூலை 25

ஈழ விடுதலைப் போராட்டத்தின் பிதாமகர்களை நினைவுகூரும் 42 ஆவது தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா நினைவு கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர் சுரேன் குருசுவாமி தெரிவித்தார்.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம்

7

## எஸ்.ரி.எவ். துப்பாக்கிச்சூடு! சந்தேகநபர் ஒருவர் மரணம்!!



கொழும்பு, ஜூலை 25

கொழும்பு, தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் கடந்த 18 ஆம் திகதி காலை நபர்

7

## கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் ஒருவர் உயிர்மாய்ப்பு!



கிளிநொச்சி, ஜூலை 25

கிளிநொச்சி பொலிஸ் நிலைய விசாரணைக் கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் இன்று தூக்கிட்டு உயிரிழந்துள்ளார் இவர், குடும்பப் பிரச்சனையை ஒட்டிய

7

# நடைபாதையில் உள்ள தற்காலிக வியாபார நிலையங்களை அகற்ற நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 25

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்புறம் உள்ள நடைபாதையில் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அத்தனை வியாபார நிலையங்களையும் அகற்றுவதற்கு நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்படும் தற்காலிக வியாபார நிலையங்களை அகற்றும் செயற்றிட்டத்தின் கீழ் முதற்கட்டமாக குறித்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பத்மநாதன் மயூரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில்,

நடைபாதையில் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அத்தனை வியாபார நிலையங்களையும் எதிர்வரும் ஜூலை 30ஆம் திகதிக்கு முன்னர் அகற்றுமாறும், அதனை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களின் அத்தனை வியாபார நிலையப் பொருட்களும் சபையினால் கையகப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நடைபாதையில் வாகனங்கள் நிறுவத்துவதும் முற்றாக தடை செய்யப்படுகின்றது. குறித்த அறிவித்தலினை மீறி வாகனங்களை நிறுத்துவோர் மீது போக்குவரத்துப் பொலிசார் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரணில் போன்றோரே கறுப்பு ஜூலையை ஏற்படுத்தினர்– பிமல் ரத்நாயக்க குற்றச்சாட்டு!

கொழும்பு, ஜூலை 25

ரணில் போன்றோரே கறுப்பு ஜூலையை ஏற்படுத்தினர் என சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற நடவடிக்கையில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பான விடயம் பற்றி கலந்துரையாடும் போது வெள்ளைப் பத்திரிகை தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பில் அமைச்சர் பிமல் தெரிவிக்கையில்,

1981இல் ரணில் விக்ரமசிங்கவால் கொண்டுவரப்பட்ட வெள்ளைப் பத்திரிகையின் நோக்கம் முழுமையாக கருமையானது.

குறித்த வெள்ளைப் பத்திரிகை மூலம் கறுப்பு வேலைத்திட்டங்களை கொண்டு வந்த ரணில் போன்றோரே யாழ்ப்பாணம் நூலகத்திற்கு தீ வைத்தனர். கறுப்பு ஜூலையையும் ஏற்படுத்தினர்.

இப்போது அரகலய வழக்கிலும் ரணில் தோல்வியடைந்துள்ளார்.

கறுப்பு ஜூலையை உருவாக்கிய அப்போதைய அமைச்சரவையில் இருந்தவர்களில் தற்போதுள்ள ஒருவர் ரணில் விக்ரமசிங்க மாத்திரமே- எனத் தெரிவித்திருந்தார்.

# நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனுக்கு எதிராக நிதிக் குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு!

சட்டவிரோத சொத்து குவிப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனுக்கு எதிராக நிதிக் குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடு சிவில் செயற்பாட்டாளரால் நேற்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

எஸ்.சிறிதரன் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாடசாலை அதிபராக கடமை ஆற்றி வந்தார். பின்னர் அரசியலில் பிரவேசித்து நாடாளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்றார்.

இந்த நிலையில் திடீரென கோடிக கணக்கில் எவ்வாறு சொத்துக்களை சம்பாதித்தார் என்பது தொடர்பில் தெளிவுப்படுத்த வேண்டும் என கோரி, அவருக்கு எதிராக இந்த முறைபாடு செய்யப்பட்டுள்ளது.

சிறிதரன் எம்.பியினுடைய மனைவியின் பெயரில் குளிர்களி விற்பனை நிலையங்கள் இரண்டும், அவருடைய மகளுடைய பெயரில் சிறப்பு அங்காடிகள் இரண்டும் இயங்குவதாகவும் தமது தேடல்களில் கண்டுபிடிக்கப்பட்டதாக முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த ஆட்சியின் போது வழங்கப்பட்ட மதுபானசாலை உரிமங்கள் இரண்டும் எஸ்.சிறிதரனின் பெயரில் இருப்பதாகவும் முறைப்பாட்டாளர் தெரிவித்தார்.

இந்நிலையில் தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டைத் தாம் வரவேற்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுபோன்ற பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்ற நிலையில், நடத்தப்படும் விசாரணைகளில் உண்மைகள் வெளிவரும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# போதை பொருட்களுடன் கனடா பிரஜை கைது!

நாட்டுக்கு சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்ட பெருமளவான போதை பொருட்களுடன் கனடா பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளால் இன்று (25) காலை குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தைச்சேர்ந்த 52 வயதுடையவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் இருந்து 400 மில்லியன் ரூபா பெறுமதியான 12 கிலோ 196 கிராம் ஹஷீஷ் மற்றும் 5 கிலோ 298 கிராம் கொக்கேய்ன் ஆகிய போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த சந்தேக நபர் கனடாவிலிருந்து கத்தார், தோஹாவிற்கு போதைப்பொருள் தொகுதியைக் கொண்டு சென்று அங்கிருந்து, கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 87 வது வருட அகவை தினம் இன்று



கொழும்பு, ஜூலை 25

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா) இன்று அதன் 86 வது ஆண்டு நிறைவடைந்து 87 வது வருட அகவையில் கால் பதிக்கின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமையகமான சௌமியபவனில் விசேட பூஜை வழிபாடுகளுடன் முன்னாள் தலைவர்களான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர்களின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து அனுஷ்டிக்கப்பட்டது.

இ.தொ.கா பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் முன்னாள் தலைவர்களான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர்களின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தார்கள்.

1939 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 திகதி அன்று ஆரம்பிக்கப்பட்ட இ.தொ.கா 87 வருட வரலாற்றைக் கொண்ட மாபெரும் தொழிற்சங்கமாகும்.

இந்நிகழ்வில் இ.தொ.கா பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், பிரதம சட்ட ஆலோசகர் மாரிமுத்து, உபதலைவர்களான. சின்னையா ராஜமனி, செல்லசாமி திருக்கேஷ் மற்றும் காரியாலய உத்தியோகத்தர்களும் கலந்துக்கொண்டார்கள். (ஐ)

# 'கிரெடிட் கார்டுகளுக்கு கூடுதல் கட்டணம் இல்லை'




கொழும்பு, ஜூலை 25

கிரெடிட் அல்லது டெபிட் கார்டுகளைப் பயன்படுத்தி செய்யப்படும் பரி வர்த்தனைகளுக்கு நிறுவனங்கள் மற்றும் நிறுவ ணங்கள்வாடிக்கையாளர்களிடம் 2.5 வீதம் முதல் 3 வீதம்வரை கூடுதல்கட்டணம்வசூலிக்கஎந்த சட்டப்பூர்வ ஏற்பாடும் இல்லை என்று இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்வுகள் இயக்குநர் வசந்தா ஆல்விஸ் சமீபத்தில் கூறினார்.

கிரெடிட் அல்லது டெபிட் கார்டு பணம் செலுத்தும்போது கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டால், வாடிக்கையாளர்கள் அட்டை வழங்கும் வங்கியில் புகார் செய்ய விருப்பம் உள்ளது என்றும், வசூலிக்கப்படும் அதிகப்படியான தொகை வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும் என்றும் அவர் கூறினார். இருப்பினும், புகார் அளிக்கும்போது, கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டதற்கான தெளிவான ஆதாரங்களுடன் பரிவர்த்தனைக்கான ரசீதுகளை வாடிக்கையாளர் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். இலங்கையில் ஆண்டு தோறும் 1.6 மில்லியன் டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் கூறினார். இவற்றில் 800,000 கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகள் என்றும் 600,000 டெபிட் கார்டு பரிவர்த்தனைகள் என்றும் அவர் கூறினார்.

இவற்றில் 800,000 கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகள் என்றும் 600,000 டெபிட் கார்டு பரிவர்த்தனைகள் என்றும் அவர் கூறினார். 8 லட்சம் கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகள், 6 லட்சம் டெபிட் கார்டு பரிவர்த்தனைகள் என்று அவர் கூறினார். 8 லட்சம் கிரெடிட் கார்டுபரிவர்த்தனைகளும், 6 லட்சம் டெபிட் கார்டு பரிவர்த்தனைகளும் நடந்ததாக அவர் தெரிவித்தார். (ஐ)




# 40 நாடுகளுக்கு விசா கட்டணத்தை நீக்க தீர்மானம்

கொழும்பு, ஜூலை 25

நாட்டின் சுற்றுலாத் துறையை வளர்க்கும் நோக்கில் மேலும் 40 நாடுகளுக்கான விசா கட்டணங்களை தள்ளுபடி செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இன்று கொழும்பில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

"ஹோட்டல் ஷோ கொழும்பு 2025" கண்காட்சி இன்று காலை கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மையத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 300 அடி பள்ளத்தில் பாய்ந்த கார் மயிரிழையில் உயிர் தப்பிய பயணிகள்



கொழும்பு, ஜூலை 25

பசறை பகுதியில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 300 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

300 அடி பள்ளத்தில் பாய்ந்த கார் மயிரிழையில் உயிர் தப்பிய பயணிகள் ; ஊயசீடரபெநள 300குவ ீயளளநபெநசள நுளஉயிந னுநயவா

காயமடைந்தவர்கள் பதுளை பகுதியைச் சேர்ந்த 64, 58 மற்றும் 22 வயதுடைய இரண்டு பெண்களும் ஒரு ஆணுமே இவ்வாறு காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளையில் இருந்து ஒக்கம்பிட்டி பகுதிக்கு தான நிகழ்வொன்றிற்கு சென்று மீண்டும் பதுளைக்கு திரும்பும் போது பசறை எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு முன்பாக வீதியை விட்டு விலகி சுமார் 300 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கார் விபத்துக்குள்ளாகும் போது காரில் ஐவர் பயணித்ததாகவும் அதில் மூவர் பலத்த காயமடைந்த நிலையில் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன், பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பாதாள தலைவருக்கு போலி பிறப்புச் சான்றிதழ்

கொழும்பு, ஜூலை 25

துபாயில் இருக்கும், பெரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரரும் பாதாள உலகக் கும்பல் உறுப்பினருமான கெஹெல்பத்தர பாஸ்மேவுக்கு, பதிவு விதிமுறைகளை துஷ்பிரயோகம் செய்து போலி பிறப்புச் சான்றிதழை வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள சீதாவாக்கை பிரதேச செயலகத்தின் கூடுதல் பதிவாளர் ருவினி வாசனாவை, கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி வியாழக்கிழமை (24) விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். குற்றப் புலனாய்வுத் துறை, கடத்தல் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு மற்றும் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், அவர் 28 ஆம் திகதி வரை காவலில் வைக்கப்பட்டார். சந்தேக நபரை ஆஜர்படுத்திய குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள், பொது அதிகாரியாகக் காட்டிக் கொண்டு போலி வெளிநாட்டு கடவுச்சீட்டைத் தயாரிப்பதற்கு உதவியதன் மூலம் தண்டனைச் சட்டம் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்ததற்காக சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்தனர். (ஐ)



# அதிகாரிகளாக இருந்தாலும் சட்டம் பாயும் பிரதமர் ஹரிணி

கொழும்பு, ஜூலை 25

*2019 ஏப்ரல் 21 அன்று இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டவர்களில், தற்போதைய அரசாங்கத்தில் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகள் யாரேனும் இருந்தால், அவர்களுக்கு எதிராகவும் சட்டம் தவறாமல் நடைமுறைப்படுத்தப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உறுதியளித்தார்.*

*இன்று பாராளுமன்றத்தில், பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய வாய்மொழி கேள்விக்கு பதிலளிக்கும் போது, பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். (ஐ)*

# ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் முன்னெடுப்பில் இதுவரை 2 கோடி பேர் இணைந்தனர்




ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் முன்னெடுப்பில் 2 கோடி பேர் இணைந்தனர். 2 கோடிக்கும் மேற்பட்ட பொதுமக்கள் திமுகவில் உறுப்பினராக இணைந்தனர். தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க "ஓரணியில் தமிழ்நாடு" எனும் மாபெரும் முன்னெடுப்பு தொடங்கப்பட்டது. ஜூலை 1ல் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள ஆளுங்கட்சியான திமுக முழு வீச்சில் தயாராகி வருகிறது. இதன் ஒரு பகுதியாக நம் மண் மொழி மானம் காக்க, "ஓரணியில் தமிழ்நாடு" எனும் மாபெரும் முன்னெடுப்பை திமுக தொடங்கியுள்ளது. இந்த ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பை திமுக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் கடந்த 1ம் தேதி தொடங்கி வைத்தார். தொடர்ந்து 3ம் தேதி முதல் வீடு, வீடாக சென்று புதிய உறுப்பினர்களை சேர்க்கும் பணி தொடங்கியது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது இல்லம் அமைந்துள்ள சென்னை ஆழ்வார்ப்பேட்டை பகுதியில் உள்ள வீடுகளுக்கு சென்று உறுப்பினர் சேர்க்கை பணியை அவரே நேரடியாக மேற்கொண்டார். தொடர்ந்து அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள், எம்பி, எம்எல்ஏக்கள், முன்னணியினர் அனைவரும் அவரவர் சொந்த வாக்குச்சாவடிகளில் இருக்கும் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு நேரில் சென்று மக்களை சந்தித்து வருகின்றனர். ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையை முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது நேரடி கட்டுப்பாட்டில் நேரடியாக கண்காணித்து வருகிறார்.

இது குறித்து அடிக்கடி மாவட்ட செயலாளர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி வருகிறார். அது மட்டுமல்லாமல் வெளிமாவட்டங்களுக்கு செல்லும் போதும் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையிலும் ஈடுபட்டு வருகிறார்.

அப்போது அரசின் நலத்திட்டங்கள் முறையாக சென்று சேர்கிறதா? என பொதுமக்களிடம் அவர் கேட்டறிந்தார். மேலும் "ஓரணியில் தமிழ்நாடு" இயக்கத்தில் ஒன்றிணையுமாறு பொதுமக்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

திமுகவினரின் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்று வருகிறது. பிரசாரம் தொடங்கப்பட்ட 22 நாட்களில் 2 கோடிக்கும் அதிகமானோர் திமுகவில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.

இது குறித்து திமுக சமூக வலைத்தளம் பக்கத்தில் கூறியிருப்பதாவது: தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க "ஓரணியில் தமிழ்நாடு" எனும் மாபெரும் முன்னெடுப்பை திமுக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்ததை தொடர்ந்து மாநிலம் முழுவதும் குடும்பம் குடும்பமாக 2 கோடிக்கு மேற்பட்ட பொதுமக்கள் சமூகநீதியை காக்கும் ஜனநாயக பேரியக்கமான திமுகவில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். (ஐ)

## கமல்ஹாசன், கவிஞர் சல்மா உட்பட 4 புதிய எம்.பி.க்கள் மாநிலங்களவையில் பதவியேற்றனர்



இன்று கமல்ஹாசன், கவிஞர் சல்மா உள்ளிட்ட 4 மாநிலங்களவை எம்.பி.க்கள் புதியதாக பதவியேற்றுள்ளனர். இவர்கள் தமிழில் உறுதிமொழி ஏற்று பதவியேற்றுள்ளனர். தமிழ்நாட்டில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திமுக-வை சேர்ந்த முகமது அப்துல்லா, சண்முகம், பி.வில்சன், அதிமுக-வைச் சேர்ந்த சந்திரசேகரன், பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் மற்றும் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ ஆகிய 6 பேரின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது. முன்னதாக கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலில் திமுக, அதிமுக சார்பில் முன்னுறுத்தப்பட்ட 6 வேட்பாளர்களும் போட்டியின்றி தேர்வாகினர். திமுக கூட்டணியின் ஆதரவுடன் பி.வில்சன், சல்மா, எஸ்.ஆர்.சிவலிங்கம், மநீம தலைவர் கமல்ஹாசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இந்நிலையில், இவர்கள் 6 பேரும் இன்று மாநிலங்களவையில் பதவி ஏற்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், இந்த 6 எம்.பி.க்களும் இன்று நாடாளுமன்றத்தில் பதவியேற்பு விழா நடைபெற்றது. இதில், திமுக சார்பில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் மாநிலங்களவை எம்.பி.யாக தமிழில் உறுதி ஏற்று பதவி ஏற்றுக் கொண்டார். இதேபோல, திமுக சார்பில் வில்சன், சிவலிங்கம், கவிஞர் சல்மா மற்றும் அதிமுக சார்பில் இன்பதுரை, தனபால் ஆகியோரும் தமிழில் உறுதி ஏற்று பதவி ஏற்றுக் கொண்டனர். அதிமுகவின் இன்பதுரை, முன்னாள் எம்.எல்.ஏ. தனபால் ஆகிய இருவரும் வருகிற ஜூலை 28ம் தேதி பதவியேற்கவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)



## பிரதமர் நரேந்திர மோடி 2 நாட்கள் மாலத்தீவுக்கு சுற்றுப்பயணம்

பிரதமர் நரேந்திர மோடி 2 நாட்கள் பயணமாக மாலத்தீவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். நேற்று முன்தினம் இங்கிலாந்து சென்ற பிரதமர் மோடி, அந்நாட்டு பிரதமர் கியர் ஸ்டார்மரை சந்தித்தார்.

இந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து, இரு நாடுகளுக்கு இடையே நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (சிஇடிஏ) என அதிகாரப்பூர்வமாக பெயரிடப்பட்ட இந்த ஒப்பந்தத்தில், பிரதமர்கள் மோடி, ஸ்டார்மர் முன்னிலையில் ஒன்றிய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் இங்கிலாந்து வர்த்தக அமைச்சர் ஜோனாதன் ரெனால்ட்ஸ் ஆகியோர் கையெழுத்திட்டனர். இதனை தொடர்ந்து இங்கிலாந்து மன்னர் சார்லசை பிரதமர் மோடி சந்தித்தார்.

இந்நிலையில் இங்கிலாந்து பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் மோடி நேற்று இரவு மாலத்தீவு புறப்பட்டார்.

இன்று தனி விமானம் மூலம் மாலத்தீவு சென்றடைந்தார். 2 நாட்கள் பயணமாக மாலத்தீவு சென்றுள்ள பிரதமர் மோடியை அந்நாடு அதிபர் முகமது முய்சு விமான நிலையத்திற்கே சென்று நேரில் வரவேற்றார். இதனை தொடர்ந்து இருநாட்டு தலைவர்களும் இருநாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளனர்.

இந்நிலையில் நாளை நடைபெறும் மாலத்தீவின் 60வது சுதந்திர தின விழாவில் பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார். இதையடுத்து மாலத்தீவு பயணத்தை நிறைவு செய்யும் பிரதமர் மோடி நாளை மாலை டெல்லி வருகிறார். (ஐ)

# நீண்ட காலம் பதவி வகித்த இந்திய பிரதமர்களில் 2வது இடம் பிடித்த மோடி



*நீண்ட காலம் பதவி வகித்த இந்திய பிரதமர்களில் பிரதமர் நரேந்திர மோடி 2வது இடத்தை பிடித்தார். 1966 முதல் 1977 வரை 4077 நாட்கள் பதவி வகித்த இந்திரா காந்தியின் சாதனையை, 4078 நாட்களை இன்றுடன் நிறைவு செய்து மோடி முறியடித்தார். முதல் இடத்தில் உள்ள ஜவஹர்லால் நேரு 16 ஆண்டுகள், 286 நாட்கள் இடைவெளி இல்லாமல் மிக நீண்ட காலம் பதவி வகித்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்*

# துலிப் மலர்களும் சைக்கிள் சவாரியும்!



தரங்கிணி

நெதர்லாந்தின் முக்கிய அடையாளமாக இருப்பது துலிப் மலர்கள். பதினாறாம் நூற்றாண்டில் துருக்கியில் இருந்து கொண்டு வரப்பட்ட இந்த மலர்கள், ஐரோப்பா முழுவதுமே பரவி இருந்தாலும் நெதர்லாந்து அவற்றை முற்றிலுமாகத் தன் வசப்படுத்திக் கொண்டது. கிட்டத்தட்ட 15,000 ஹெக்டேர் பரப்பளவில் தூலிப்கள் இங்கு வளர்க்கப்படுகின்றன. இருபத்தைந்தாயிரம் கோடிகளுக்கான வருமானம் இந்த துலிப் மலர்களின் ஏற்றுமதியில் இருந்து கிடைக்கிறது. அது மட்டும் இல்லாமல், வருடந்தோறும் வசந்த காலத்தில் பூத்துக் குலுங்கும் இந்த துலிப் மலர்களைப் பார்வையிட வந்து குவியும் சுற்றுலாவாசிகளால் 18 ஆயிரம் கோடி வருமானம் பெறப்படுகிறது.

நான் ஜுன் மாதத்தில் சென்றதால் உலகிலேயே மிகப் பெரிய துலிப் மலர்களின் தோட்டமாகிய கேகேன்ஹாப் (முநரமநஒழக) தோட்டத்தைப் பார்வையிடும் வாய்ப்பு கிடைக்கவில்லை. 'கண் கொள்ளா அழகு' என்பார்களே அதை கேகேன்ஹாப் தோட்டத்தில்தான் உணர முடியும். மார்ச் மாதத்தில் இருந்து மே மாதம் வரை மட்டுமே திறந்திருக்கும் இந்தத் தோட்டத்தைப் பார்வையிடும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்தால், ஒரு பத்து ஜிபிக்கு போட்டோ எடுத்துத் தள்ளுங்கள். முடியாதவர்கள் விஜயின் நண்பன் படத்தில் வரும் 'அஸ்கு லஸ்கா' பாட்டில் கேகேன்ஹாப் தோட்டத்தின் அழகைக் கண்டு மகிழலாம். ஆனால், எப்படியும் அந்த மலர்களின் கொள்ளை அழகைக் கண்டுவிடவேண்டும் என்று ஒரு முடிவோடு சுற்றித் திரிந்த என் கண்களில் பட்டது 'துலிப் மியூசியம்.' மிகப் பெரிய அளவில் இல்லை என்றாலும் துலிப்களைப் பார்க்காமல் நெதர்லாந்தை விட்டுச் செல்வதா என்ற என்னுடைய கவலைக்குச் சிறிதளவு மருந்தாக இருந்தது. துலிப்கள் நெதர்லாந்தை வந்தடைந்த வரலாறு, மிக அழகாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. உள்ளே சென்று பார்ப்பதற்கு ஏழு யூரோக்கள் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், வெளியே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் மலர்களைப் பார்ப்பதற்கு எந்தக் கட்டணமும் இல்லை. நிறைய வகையிலான துலிப் செடிகளின் கிழங்குகள் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. சென்னையின் தட்பவெப்பநிலைக்கு துலிப்கள் தாக்குப் பிடிக்காது. மற்ற நாடுகளின் சுற்றுலாவாசிகள் துலிப் செடிகளின் கிழங்கை வாங்கிச் செல்கின்றனர். வெங்காயம், பூண்டு போன்று கிழங்குகளை வேர்களாகக் கொண்ட ஒரு செடி வகை. ஒரு கிழங்கு நட்டுவைத்தால் போதும், அது தன்னைச் சுற்றி பல கிழங்குகளை உண்டு பண்ணி ஒரு தோட்டத்தையே உருவாக்கும். இந்தக் கிழங்குகள் பல வருடங்கள் தாக்குப்பிடிக்கக் கூடியவை.

கேகேன்ஹாப் (முநரமநஒழக) தோட்டத்தில் கோடைக் காலத்தில் கிழங்குகளைத் தோண்டி எடுத்துவிட்டு, மீண்டும் செப்ரெம்பர் மாதம் மத்தியில் தொடங்கி டிசம்பர் மாதம் வரை விதைக்கிறார்கள். அதிலும் இலையுதிர் காலமான அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்கள் முக்கியமான விதைப்பு மாதங்கள். ஆண்டுதோறும் 70 லட்சத்திற்கு மேற்பட்ட துலிப் கிழங்குகள் கையால் விதைக்கப்படுகின்றன. குளிர்காலத்தில் இந்தக் கிழங்குகள் நிலத்தில் உறைந்திருக்கும். தாவரத்தின் வளர்ச்சியைத் தூண்டும் முக்கியமான ஹார்மோன்களின் காலம் அது. வெளியே எந்த ஒரு மாற்றமும் தெரியாவிட்டாலும் உள்ளே அந்தக் கிழங்குகள் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கும். பின்னர் வசந்தகாலத்தின் தொடக்கமான மார்ச், ஏப்ரலில் கிழங்கு முளைத்து இலைகளும் தண்டுகளும் மேலே வரத் தொடங்குகின்றன. பசுமை விரிந்து பூமுகம் உருவாகத் தொடங்குகிறது. முழு வசந்தகாலமான ஏப்ரல், மே மாதங்களில்தான் துலிப் மலர்கள் முழுமையாக மலரத் தொடங்குகின்றன. எனவேதான் மார்ச் மத்தியில் இருந்து மே மாத முடிவு வரை கேகேன்ஹாப் (முநரமநஒழக)



தோட்டம் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்திருக்கும். ஆம்ஸ்டர்டாம்க்குச் செல்பவர்கள் இந்தத் தோட்டம் திறந்திருக்கும் நாட்களாகப் பார்த்து முன்கூட்டியே திட்டமிடுவது நல்லது.

துலிப் சார்ந்த பரிசுப் பொருட்கள் மியூசியத்தில் விற்பனைக்குக் கிடைக்கின்றன. இந்த மியூசியமும் ஆம்ஸ்டர்டாம் சென்ட்ரல் ஸ்டேஷனில் இருந்து நடந்து செல்லும் தூரத்திலேயே இருக்கிறது. அதற்கு அருகிலேயே சீஸ் மியூசியமும் இருக்கிறது. இவை இரண்டும் ஆன் பிராங்க் ஹவுஸ்க்கு எதிர் தெருவிலேயே இருப்பதுதான் இன்னும் சிறப்பு. என்னை நகரத்தின் நடுவிலேயே தங்குவதற்கு அறிவுறுத்திய தோழமையை நன்றியுடன் நினைத்துக் கொண்டேன். மிக முக்கியமாகப் பார்க்கவேண்டிய இடங்கள் எல்லாமே கைக்கெட்டும் தூரம் என்பது போல் என் கால்களுகெட்டும் தூரத்தில் இருந்தன. கால்கள் கெஞ்சினால் இருக்கவே இருக்கிறது டிராம். மிஞ்சிப்போனால் ஒன்று அல்லது இரண்டு டிராம் நிறுத்தங்களில் அடுத்த இடத்தைப் பார்வையிடச் சென்றுவிட முடியும்.

துலிப் மியூசியத்தைப் பார்வையிட்ட பிறகு அடுத்து நான் சென்ற இடம் ப்ளூமிங் மார்க்கெட். ஆம்ஸ்டர்டாமில் மலர்களைப் பார்த்து ரசிக்கக் கூடிய இன்னோர் இனிமையான இடம் ப்ளூமிங் மார்க்கெட் எனப்படும் மிதக்கும் மலர்ச் சந்தை. 1862ஆம் ஆண்டிலிருந்து இயங்கிவரும் இந்தச் சந்தை, மின்சாரம் இல்லாத காலத்தில் கப்பலில் கொண்டு வரப்படும் மலர்களுக்காக அமைக்கப்பட்டது. ஆம்ஸ்டர்டாம் சிங்கெல் கால்வாயின் ஓரத்தில் அமைந்துள்ள இந்தச் சந்தை, உலகின் ஒரே மிதக்கும் மலர்ச் சந்தை என்கிற சிறப்பைக் கொண்டுள்ளது. இங்கு துலிப் மலர்கள், கிழங்குகள், மலர் சார்ந்த பரிசுப் பொருட்கள் விற்பனைக்குக் கிடைக்கின்றன. கேகேன்ஹாப் தோட்டத்திற்குச் செல்ல முடியாத நேரத்தில், இந்த வண்ண வண்ண மலர்களின் சந்தையைப் பார்த்தும் ஒளிப்படங்கள் எடுத்தும் மகிழலாம். அங்கிருந்த மலர்களுடன் நான் சுற்றிச் சுற்றி ஒளிப்படம் மட்டும் எடுத்துக்கொண்டிருந்தேன். எந்த மலரையும் விலைகொடுத்து வாங்கவில்லை என்றாலும் முக மலர்ச்சியுடன் என்னிடம் நடந்து கொண்டனர்.

அடுத்து மிக முக்கியமாகச் சொல்ல வேண்டியது சைக்கிள் சவாரி. 35 ஆயிரம் கிலோமீட்டருக்கும் மேல் சைக்கிள்களுக்கான தனிப் பாதையைக் கொண்டிருக்கும் நாடு நெதர்லாந்து. பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் பெரும்பாலும் சைக்கிளையே உபயோகப்படுத்துகிறார்கள். மாணவர்கள் மட்டுமல்ல, அலுவலகத்துக்கும் சைக்கிள் சவாரிதான். சைக்கிள்களுடன் ரயிலிலும் பயணிக்கலாம். இதற்கான தனி டிக்கெட்டும் உண்டு. சைக்கிள்களுடன் பயணிப்பவர்களுக்காகச் சற்றே இட வசதி கொண்ட தனி இருக்கைகள் ரயில்களில் உள்ளன. நம் திரையரங்குகளில் காணப்படுவது போல மடக்கக்கூடிய இருக்கைகள் ரயில்களில் அமைக்கப்பட்டுள்ளன. இருக்கையில் அமர்ந்துகொண்டு சைக்கிளையும் கையில் பிடித்துக் கொள்ளலாம். சைக்கிள் பயணம் இங்கு வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே பார்க்கப்படுகிறது. உலகிலேயே மிகப் பெரிய சைக்கிள் பார்க்கிங் நெதர்லாந்தின் உத்ரெக்ட் ரயில்வே நிலையத்தில் அமைந்துள்ளது. 2019இல் திறக்கப்பட்ட இது 12,500 சைக்கிள்கள் வரை நிறுத்தும் வசதியுடன் மூன்று மாடிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

ஆம்ஸ்டர்டாம்க்குச் சுற்றுலா செல்பவர்கள் சைக்கிள்களை வாடகைக்கு எடுத்து, நகரம் முழுவதும் சுற்றிப் பார்ப்பது வழக்கமாக உள்ளது. ஒரு நாளைக்கு நான்கு அல்லது ஐந்து யூரோக்கள் வாடகையாக வசூலிக்கப்படுகிறது. ஆனால், சைக்கிளில் சிட்டென்றுப் பறக்கும் உள்ளூர்வாசிகளுக்குத் தொந்தரவு கொடுக்காமல் பயணித்தால் நல்லது. சைக்கிள்களுக்கென்று தனியே சிவப்பு நிறப் பாதை உள்ளது. தெரியாமல் அதில் நடக்க ஆரம்பித்தால் அவ்வளவுதான். சைக்கிளுக்குக் கீழே நசுங்கிவிடும் வாய்ப்புகள் அதிகம்.




வெளிநாட்டில் சைக்கிளா? அது பாட்டரிவைத்த, அதிநவீன சைக்கிளாக இருக்குமோ என்று நினைக்காதீர்கள். அச்சு அசல் நம் ஊரில் நாற்பது வருடங்களுக்கு முன் ஓடிய முன்புறம் டைனமோ, பின்புறம் கேரியர் மற்றும் பாக்ஸ் வைத்த சைக்கிள். முன்புறத்தில் பெரிய பெட்டி அமைப்புடன் குழந்தைகள் உட்காரத் தகுந்த வகையில் வடிவமைக்கப்பட்ட 'பக்பீட்ஸ்' சைக்கிள்களும் உள்ளன. சில சுற்றுலாவாசிகள் 'றெக்கை கட்டி பறக்குதடா அண்ணாமலை சைக்கிள்" என்கிற ரீதியில் தங்கள் துணையை முன்புறம் அமரவைத்து அழகாக ஓட்டிச்சென்றனர்.

நெதர்லாந்து கலாசாரம் பசுமைச் சிந்தனையிலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டிலும் வேரூன்றியுள்ளது. சைக்கிள்கள், காற்றாலை, சூரிய சக்தி ஆகியவை இயற்கையோடு ஒத்துழைக்கும் வாழ்வைப் பிரதிபலிக்கின்றன. எளிமையான உணவும் மகிழ்ச்சியான மனநிலையும் அந்த நாட்டை மகிழ்ச்சிக் குறியீட்டில் முன்னணியில் கொண்டு செல்கின்றன.

# AI-யால் இனி வங்கிகளுக்கே பாதுகாப்பு இருக்காது பணம் திருடப்படலாம்: சாம் ஆல்ட்மன் எச்சரிக்கை



ஓபன் ஏஐ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சாம் ஆல்ட்மன் ஒரு முக்கிய எச்சரிக்கை விடுத்துள்ளார். தகவல் தொழில் நுட்பத்தில் புதிய புரட்சியை ஏஐ டெக்னால்ஜி ஏற்படுத்தியுள்ளது. மருத்துவம், கல்வி, மென்பொருள் என ஏகப்பட்ட துறைகளில் ஏஐ ஆதிக்கம் அதிகரித்தே வருகிறது. ஏஐ வருகையால் மக்களுக்கு மிகப் பெரிய பலன் உள்ளது என்ற வாதம் வைக்கப்பட்டாலும் கூட, முன்பு பல மணி நேரம் எடுத்துச் செய்த வேலைகளைக் கூட இப்போது சில நொடிகளில் செய்து முடித்துவிட முடிகிறது. இந்த ஏஐ டூல்களை பலரும் பல விதமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். இதனால் பல்வேறு துறைகளில் வேலையிழப்பு அபாயமும் ஏற்பட்டு வருகிறது. இன்னொரு பக்கம் மனிதனின் சிந்திக்கும் ஆற்றலை ஏஐ மட்டுப்படுத்திவிடும் என்ற அபாயகரமான ஆய்வு முடிவுகளும் நிபுணர்களின் சொல்கின்றன.

இந்நிலையில், சாட்ஜிபிடி அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனமான ஓபன் ஏஐ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சாம் ஆல்ட்மன் ஒரு முக்கிய எச்சரிக்கை விடுத்துள்ளார். அதன்படி அவர், "தற்போதைய காலகட்டத்தில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், இது தவறான நோக்கத்துடன் பயன்படுத்தலாம் என்று எச்சரித்துள்ளார். அதாவது, ஏஐ வளர்ச்சியின் காரணமாக, மிகவும் சுலபமாக போலி வீடியோ, ஆடியோ அல்லது புகைப்படங்கள் உருவாக்க முடிகிறது. இது சில சமயங்களில் உண்மையான நபர்கள் போன்றே தோன்றும்.

யார் நம்மை அழைக்கிறார்கள், யாரிடம் நாம் பேசுகிறோம் என்பதையே நம்ப முடியாத நிலைக்கு நாம் செல்லக் கூடும் என்று கூறியுள்ளார். வரும் காலங்களில், வங்கிகளின் பாதுகாப்பு அம்சங்களை யுஜ முறியடிக்கலாம். இதன் மூலம், அடையாள திருட்டு, இணைய மோசடி, போலி செய்திகள் போன்ற விஷயங்கள் அதிகரிக்கும் அபாயம் இருக்கிறது. எனவே, ஏஐ வளர்ச்சியுடன் இணைந்து, அதனைத் தவறாக பயன்படுத்தும் முயற்சிகளையும் கட்டுப்படுத்த அரசு, தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.(ஐ)

## கம்போடியாவில் சைபர் மோசடி சோதனைகளில் 105 இந்தியர்கள் கைது

கம்போடியாவில் சைபர் மோசடி சோதனைகளில் 105 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் மொபைல் போன்கள் உள்ளிட்ட பல கேஜெட்டுகள் அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யபட்டுள்ளது. சைபர் குற்றவாளிகள் அல்லது ஆன்லைன் மோசடி செய்பவர்களுக்கு எதிரான பாரிய நடவடிக்கையில், 15 நாட்களில் 138 இடங்களில் சோதனைகளைத் தொடர்ந்து கம்போடியாவில் 3,000 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 105 இந்தியர்கள் மற்றும் 606 பெண்கள் அடங்குவர். கைது செய்யப்பட்ட இந்தியர்களை நபர்களை மீண்டும் அழைத்து வர இந்திய அரசு கம்போடிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த மாதம் இந்தியாவிற்கும் கம்போடியாவிற்கும் இடையே நடந்த உயர்மட்டக் கூட்டத்தைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நபர்கள் கம்போடியாவில் தங்கி சைபர் குற்றங்களைச் செய்கிறார்கள். இதனால் கம்போடியா ஒரு சைபர் மோசடி மையமாக உலக நாடுகளால் கருதபடுகிறது. இந்தியர்களைத் தவிர, சீனர்கள், வியட்நாமியர்கள் மற்றும் இந்தோனேசிய குடிமக்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 3,075 பேரின் நாடுகள் விவரம்:

1,028 சீன குடிமக்கள்
693 வியட்நாமியர்கள்
366 இந்தோனேசியர்கள்
105 இந்தியர்கள்
101 வங்கதேசிகள்
82 தாய்லாந்து நாட்டவர்கள்
57 கொரியர்கள்
81 பாகிஸ்தானியர்கள்
13 நேபாள நாட்டவர்கள்
4 மலேசியர்கள்

மேலும் பிலிப்பைன்ஸ், லாவோஸ், கேமரூன், நைஜீரியா, உகாண்டா, சியரா லியோன், மங்கோலியா, ரஷ்யா மற்றும் மியான்மர் குடிமக்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். சோதனைகளின் போது கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் மொபைல் போன்கள், போதைப்பொருள், இந்திய மற்றும் சீன காவல்துறையினரின் போலி சீருடைகள், போதைப்பொருள் பதப்படுத்தும் உபகரணங்கள், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள், எக்ஸ்டசி பவுடர் மற்றும் பிற போதைப்பொருட்கள் உள்ளிட்ட கேஜெட்டுகள் மீட்கப்பட்டன. இந்திய அரசாங்கம் தனது குடிமக்களை மீண்டும் அழைத்து வருவதற்கான செயல்முறையைத் தொடங்கியுள்ளது. ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின்படி, சைபர் மோசடியில் ஈடுபட்டு கம்போடியா போன்ற நாடுகளுக்குத் திரும்பும் எந்தவொரு இந்தியருக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கூறப்படுகிறது. (ஐ)







## கூகுள் நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி சுந்தர் பிச்சையின் நிகர மதிப்பு ரூ.9,516.8 கோடியை தாண்டியது

கூகுள் நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை ஆவார். தமிழ்நாட்டில் ஒரு நடுத்தர குடும்பத்தை சேர்ந்த இவர் 2004-ம் ஆண்டு கூகுள் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார்.

படிப்படியாக முன்னேறிய சுந்தர் பிச்சை கூகுளின் ஆண்ட்ராய்டு பிரிவை வழிநடத்தினார். இவரது திறமையால் 2015-ம் ஆண்டு கூகுள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக பொறுப்பேற்றார். இப்பதவிக்கு வந்து தற்போது சுந்தர் பிச்சை 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். இந்த நிறுவனத்தில் மிக நீண்ட காலம் உயர் பதவியை சுந்தர் பிச்சை வகித்து வருகிறார்.

சுந்தர் பிச்சை பொறுப்பேற்றது முதல் தற்போது வரை கூகுள் நிறுவனத்தின் பங்குகள் 400 சதவீதத்துக்கும் மேல் உயர்ந்துள்ளது. 2023-ம் ஆண்டு முதல் நிறுவனத்தின் சந்தை மதிப்பு 1 டிரில்லியன் டாலருக்கும் (இந்திய மதிப்பில் சுமார் 86.5 லட்சம் கோடி) அதிகமான உள்ளது. குறிப்பாக செயற்கை நுண்ணறிவு ஏ.ஐ. துறையில் கூகுள் அடைந்த முன்னேற்றம் நிறுவனத்தின் பங்குகளை அசுர வேகத்தில் உயர்த்தியது. இதன்காரணமாக இந்த நிறுவனத்தின் பங்குகள் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்து காணப்படுகிறது. முதலீட்டாளர்களுக்கு 120 சதவீதத்துக்கும் மேலான வருமானத்தை கூகுள் வழங்கி உள்ளது.

கூகுள் நிறுவனத்தின் இந்த பிரமாண்ட வளர்ச்சி சுந்தர் பிச்சையை பில்லியனர் அந்தஸ்துக்கு உயர்த்தியது. ப்ளூம் பெர்க் அறிக்கையின் படி சுந்தர் பிச்சையின் சொத்து மதிப்பும் 1.1 பில்லியன் (இந்திய மதிப்பில் ரூ.9 ஆயிரம் கோடி) டாலராக உயர்ந்துள்ளது. மேலும் போர்ப்ஸ் பில்லியனர்கள் பட்டியலும் சுந்தர் பிச்சையின் நிகர மதிப்பு ரூ. 1.2 பில்லியனாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மிகப்பெரிய கோடீசுவரர் பட்டியில் சுந்தர் பிச்சை இடம் பிடித்துள்ளார்.

ஒரு நிறுவனத்தின் நிறுவனராக இல்லாத தலைமை நிர்வாக அதிகாரி ஒருவர் பில்லியனர் ஆவது என்பது மிகவும் அரிதான சாதனையாகும். இந்த சாதனையை சுந்தர் பிச்சை நிகழ்த்தி தமிழரின் பெருமையை உலகெங்கும் நிலை நாட்டி உள்ளார்.

(ஐ)

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு - கிழக்குச்சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் சமநேரத்தில் (காலை 10 மணிக்கு) இந்தப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் செம்மணி மனித புதைகுழிப் பகுதியிலும், முல்லைத்தீவில் மாவட்ட செயலகத்துக்கு அருகாமையிலும், கிளிநொச்சியில் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகாமையிலும், வவுனியாவில் புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமையிலும், மன்னாரில் நகரப் பகுதியிலும், அம்பாறையில் திருக்கோவில் பகுதியிலும், மட்டக்களப்பில் காந்திப் பூங்கா பகுதியிலும், திருகோணமலையில் சிவன் கோயில் முன்பாகவும் இந்தப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எடுக்கப்படும் இலங்கை தொடர்பான தீர்மானம் வலுப்பெறும் வகையில் இந்தப் போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளோம் என்று வடக்கு - கிழக்குச் சமூக இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவாக "மாண்புமிகு மலையக மக்கள் சிவில் சமூகக் கூட்டிணைவு" அமைப்பினர் கொழும்பு ஐக்கிய நாடுகள் சபை வளாகத்தின் முன்பாக நாளை காலை 10 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த்தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி, மூத்த போராளிகளான ஜெகன், தேவன், நடேசுதாசன் உட்பட 53 ஈழ விடுதலைப் போராட்டத்தின் பிதாமகர்களையும் பொதுமக்களையும் அஞ்சலிக்கும் 42 ஆவது ஆண்டு நினைவேந்தலாக இது நடைபெறுகின்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மூத்த ஊடகவியலாளர் வீ.தனபாலசிங்கம், விருந்தினர்களாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.நவீந்திரா (வேந்தன்ஸ), சமத்துவக் கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## எஸ்.ரி.எவ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவரைக் குறிவைத்து துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேகநபர் இன்று காலை சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இன்று அதிகாலை 4:30 மணியளவில், கெந்தல்லாவிட்ட, ஹஹலகம, கஹதுடுவ பகுதியில் உள்ள ஒரு கைவிடப்பட்ட வீட்டை பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் குழு ஆய்வு செய்ததனர்.

அங்கு மறைந்திருந்த சந்தேகநபர் விசேட அதிரடிப் படை அதிகாரிகளை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்த பதிலுக்கு விசேட அதிரடிப் படை அதிகாரிகளும் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த சந்தேகநபர் பின்னர் உயிரிழந்துள்ளார்.

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசாரணைகளுக்காக இன்று பொலிஸாரால் அழைத்து வரப்பட்டிருந்தார். விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த நேரத்தில், தான் அணிந்திருந்த சட்டையின் ஒரு பகுதியைக் கிழித்து, விசாரணைக் கூண்டுக்குள் இன்று மதியம் 12.08 மணியளவில் தூக்குப் போட்டு உயிரை மாய்த்துள்ளார்.

உயிரிழந்தவர் கிளிநொச்சி ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த இரத்தினம் ராசு (வயது 66) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நல்லூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் ஓகஸ்ட் 19ஆம் திகதியும், 24ஆம் திருவிழாவான தேர்த் திருவிழா ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி காலையும், மறுநாள் 22ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று, மாலை கொடியிறக்கம் நிகழ்த்தப்படுவதோடு, மகோற்சவம் நிறைவு பெறும்.

# கனடாவில் இருந்து யாழ் வருகை தந்த நபர் சடலமாக மீட்பு!

*கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த நபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.*

*யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியை சேர்ந்த 63 வயதான நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.*

*குறித்த சம்பவம் நேற்றைய (24) தினம் இடம்பெற்றுள்ளது.*

*உயிரிழந்த நபர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கனடாவில் இருந்து அவரது மச்சான் முறையானவருடன் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.*

*குறித்த நபரின் மனைவியும், மூன்று பிள்ளைகளும் கனடாவில் உள்ளனர்.*

*இந்தநிலையில் யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் உள்ள தனது வீட்டில் குறித்த நபர் தங்கியிருந்த வேளை நேற்று உயிரிழந்துள்ளார்.*

*குறித்த நபரின் வீட்டுக்கு நேற்று பிற்பகல் அவரது மச்சான் சென்றிருந்த நிலையில், அவர் சடலமாக இருப்பதை அவதானித்த நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.*

*இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.*

*சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.*

*சாட்சிகளை யாழ்ப்பாணம் பொலிஸார் நெருப்படுத்தியிருந்தனர்.*

*சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# ஈழத்தமிழ் இன அழிப்பு நாளில் பிரித்தானியா வாழ் மக்கள் முன்னெடுத்த போராட்டம்!

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை தொடர்வதனை கண்டித்தும், ஈழத்தமிழ் இன அழிப்பு நாளான கறுப்பு யூலைக்கு எதிர்ப்பு தெரிவித்து, குறித்த படுகொலைக்கு நீதி கோரி பிரித்தானியா வாழ் மக்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டம் லண்டனில் உள்ள பாராளுமன்ற சதுக்கத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றிருந்தது.

லண்டன் தமிழீழத்தின் சுயநிர்ணய இயக்கம் ஐஆளுனுவுநுஸ, தமிழீழ சுயநிர்ணய அமைப்பு மற்றும் ஏனைய தமிழ் அமைப்பின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

'இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலை தொடர்ந்து இடம்பெறுகின்றது' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த போராட்டத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலஞ்சம் பெற்ற கலைஞர் ஒருவர் கைது

இரண்டு நபர்களிடமிருந்து தலா 30,000 ரூபாய் இலஞ்சம் கேட்ட குற்றச்சாட்டின் பேரில் கலைஞர் வினோத் தரங்க கைது செய்யப்பட்டுள்ளார். மதுகம பகுதியைச் சேர்ந்த அதிபர் ஒருவரும், அ/ஹங்கல்ல பகுதியைச் சேர்ந்த விமானப்படை அதிகாரி ஒருவரும் தாக்கல் செய்த முறைப்பாடுகளுக்கு அமைய இவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த அதிபர் தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழுவில் முன்னெடுக்கப்படும் விசாரணைக்கு அமைவாக குறித்த விசாரணைகளை நிறுத்துவதற்கு கடிதம் ஒன்றை வழங்குவதாகவும், விசாரணை தொடர்பான கோப்புகளைப் பெற்றுத் தருவதாகவும் கூறி குறித்த நபர் 30 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் கோரியுள்ளார். அதேபோல், விமானப் படை அதிகாரி தொடர்பிலும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அமைவாக அவரை கைது செய்யாமல் இருக்கவும் மற்றும் அது தொடர்பாக கடிதம் ஒன்றை பெற்றுத் தருவதாக கூறியும் குறித்த சந்தேகநபர் இலஞ்சம் கோரியுள்ளார்.

# "மாகாண சபைகளை பலவீனப்படுத்த முயற்சி"

மாகாண சபைகளை சகல அமைச்சுகளும் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்று இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது போக்குவரத்து அமைச்சிடம் கேள்வி எழுப்பி உரையாற்றும் போதே சாணக்கியன் எம்.பி இவ்வாறு கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த அமைச்சரிடம் பல வீதிகள் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைத்திருந்தோம். இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் எமது மாவட்டத்தில் அதிகமான வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உட்பட்டவை, அதேபோன்று பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளும் உள்ளன. ஆனால் இவற்றுக்கான நிதிகளை மத்திய அரசாங்கமே வைத்திருக்கின்றன. மாகாண சபைகளுக்கு கீழுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நாங்கள் மத்திய அரசாங்கத்திடம் கேட்க முடியாது. இந்நிலையில் உங்கள் அமைச்சின் கீழ் மாகாண அமைச்சுக்கு ஏதேனும் நிதி ஒதுக்கீடு செய்ய ஒழுங்குகள் உள்ளனவா? என்றார்.

இதன்போது பதிலளித்த போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன கூறுகையில், வீதிகள் பல வகை உள்ளன. அவற்றில் மாகாண சபைகளுக்கு உரித்தான வீதிகள் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. நிதி மற்றும் தொழில்நுட்பம் என்பன கிடையாது. இதனால் அந்த வீதிகளை அபிவிருத்தி செய்ய முடியாத நிலைமைகள் உள்ளன. எனினும் நாங்கள் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தின் ஊடாக இவ்வாறான வீதிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எடுத்து அதை அபிவிருத்தி செய்யவும், தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுப்போம் என்றார்.

இதனிடையே குறுக்கிட்டு கருத்துரைத்த சாணக்கியன், கடந்த வாரத்தில் சுகாதார அமைச்சரிடம் வைத்தியசாலைகள் தொடர்பாக கேட்ட போது மத்திய அரசாங்கம் மாகாண வைத்தியசாலைகளை எடுத்து சிறந்த வைத்தியசாலைகளை அமைக்கப் போவதாக கூறியுள்ளீர்கள். அதே போன்று நீங்களும் மாகாண வீதிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எடுத்து செய்யப் போவதாக கூறியுள்ளீர்கள். இதற்கு நிதி இல்லை என்பதே காரணமாகும்.

இந்நிலையில் மாகாண சபைகளை பலவீனமாக்கும் செயற்பாடுகளை எல்லா அமைச்சுகளும் செய்கின்றன. மாகாண சபை முறைகளை பலவீனப்படுத்தாமல் ஏன் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நிதிகளை ஒதுக்க முடியாது என்றார்.

# வடமாகாண குத்துச்சண்டை போட்டி முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அணி சாதனை!

வடமாகாண குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அணியினர் முதலிடத்தை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

வடமாகாண குத்துச்சண்டை போட்டி வடமாகாண விளையாட்டு திணைக்களத்தால், முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் நடாத்தப்பட்டது.

கடந்த நான்கு நாட்களாக நடத்தப்பட்ட குத்துச்சண்டை போட்டியில்,

முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அணியினர் 7 தங்கம், 6 வெள்ளி பதக்கங்களைப் பெற்று முதலிடத்தை தமதாக்கி சாதனை படைத்துள்ளனர்.

குறித்த போட்டியில் பெண்கள் பிரிவில் 2ஆம் இடத்தை வவுனியா மாவட்டமும், 3ஆம் இடத்தை கிளிநொச்சியும் பெற்றுக்கொண்டது.

ஆண்களுக்கான குத்துச்சண்டை போட்டியில் 1ஆம் இடத்தை வவுனியாவும், 2ஆம் இடத்தை யாழ்ப்பாணமும், 3ஆம் இடத்தை முல்லைத்தீவு மாவட்ட அணியும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.07.2025 வெளியிடப்பெற்றது.